**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE, ERODE

**CALENDAR CASE NO.585/2023**

2026ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 13–ம் தேதியன்று அரசு சாட்சியாக விசாரிக்கப்படும் இவ்வாக்குமூலம் 1969ம் ஆண்டு 54–வது சட்டத்திலுள்ள 6(2) பிரிவுகளின்படி திருமதி.K.கிருஷ்ண பிரியா, M.L., தலைமை நீதித்துறை நடுவர், ஈரோடு அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது/பிரமாணம் செய்யப்படுகிறது.

பெயர் –திரு.கார்த்தி **PW–3** தொழில் –

த/க பெயர் – வயது –

கிராமம் –

தாலுக்கா –

**(எதிரி ஆஜர் )**

**<u>முதல் விசாரணை:</u>–**

1) நான் தற்போது அம்மாபேட்டை காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியில் உள்ளேன். கடந்த 24.02.2021 ஆம் தேதி இரவு 9.00 மணிக்கு சித்தோடு காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக நான் பணியாற்றி வந்தேன். அப்போது அந்த காவல் நிலையத்தில் தலைமை காவலராக பாலசுப்பிரமணியம் என்பவர் நிலைய அலுவலில் இருந்தபோது மாதையன் மகன் பசுபதி என்பவர் நிலையம் ஆஜராகி தந்த எழுத்து மூல புகாரை பெற்று குற்றத்தின் தன்மை பொறுத்து குற்ற எண்.138/2021, இதச பிரிவு 279, 337 ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார். அந்த முதல் தகவல் அறிக்கை அசல் **அ.சா.ஆ.3** ஆகும். முதல் தகவல்

K KRISHNA PRIYA

Digitally signed by K KRISHNA PRIYA
Date: 2026.02.13 18:29:49 +0530

அறிக்கை அசல் மற்றும் புகார் அசலை நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்துள்ளார். அதன் நகல் ஒன்றை விசாரணைக்காக என்னிடம் ஒப்படைத்தார்.

2) நான் இந்த வழக்கினை விசாரணைக்கு எடுத்துக் கொண்டு 25.02.2024 ஆம் தேதியில் காலை 6.30 மணிக்கு சம்பவயிடம் சென்று சாட்சிகள் சரவணன் மற்றும் ரமேஷ் ஆகியோர்கள் முன்னிலையில் பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். அந்த பார்வை மகஜரில் சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றேன். மாதிரி வரைபடம் **அ.சா.ஆ.4** ஆகும். சாட்சிகள் பசுபதி, சிட்டிசன், மோகன்ராஜ், கிருஷ்ணன், வரதராஜ், செந்தில், குமார், மூர்த்தி, சரவணன் மற்றும் ரமேஷ் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

3) 28.02.2021 ஆம் தேதி விபத்தில் காயம்பட்டு சிகிச்சையில் இருந்து வந்த மாதையன் அரசு மோகன் குமாரமங்கலம் மருத்துவமனை சேலத்தில் சிகிச்சை பலனின்றி இறந்து போன Intimation கிடைக்க பெற்று அதன் அடிப்படையில் சட்ட பிரிவை 279, 304(A) IPC-ஆக மாற்றம் செய்து சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை தயார் செய்தேன். அன்றைய தினமே சேலம் மோகன் குமாரமங்கலம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் வைத்து காலை 10.30 மணி முதல் மதியம் 12.30 மணி வரையில் பஞ்சாயத்தார் மற்றும் சாட்சிகள் முன்னிலையில் பிரேத

K KRISHNA PRIYA
Digitally signed by K KRISHNA PRIYA
Date: 2026.02.13 18:29:54 +0530

விசாரணை மேற்கொண்டு பிரேத விசாரணை அறிக்கை தயாரித்துள்ளார். அந்த பிரேத விசாரணை அறிக்கை **அ.சா.ஆ.5** ஆகும். இறப்புக்கான காரணம் கண்டறியும் பொருட்டு பிரேத பரிசோதனைக்காக மேற்படியாரின் உடலை காவலர் திரு லிஜீ சால்ஜ் மூலம் விண்ணப்ப கடிதத்துடன் சேர்த்து மருத்துவருக்க அனுப்பினேன்.

4) பின்னர் வழக்கு கோப்பை ஆய்வாளர் திரு முருகையன் அவர்களிடம் மேற்கொண்டு தொடர் விசாரணைக்காக ஒப்படைத்தேன். மேற்படி காவல் ஆய்வாளர் உடன் நான் வேலை பார்த்துள்ளதால் அவருடைய கையொப்பம் மற்றும் கையெழுத்து எனக்கு நன்கு பரிட்சையமானதாகும். இந்த வழக்கு விசாரணையிலும் அவர் உடன் நான் இருந்தேன். மேற்படி காவல் ஆய்வாளர் தற்போது பணி மாறுதல் ஆகி வெளிமாவட்டம் சென்றுள்ளதால் அவரால் உடனடியாக சாட்சியம் அளிக்க இந்த வழக்கில் ஆஜராக முடியாது என்பதனால் கால விரயத்தை தவிர்க்கும் பொருட்டு விசாரணை பற்றி நான் சாட்சியம் அளிக்கிறேன்.

5) 08.03.2021 ஆம் தேதி காலை 11.00 மணிக்கு காவல் நிலையத்தில் தன்னிச்சையாக ஆஜரான எதிரி கோபால் என்பவரை கைது செய்து ஆய்வாளர் தக்கப்பிணையில் விடுவித்துள்ளார். 09.03.2021 ஆம் தேதி எதிரி ஓட்டிச் சென்ற வாகனத்தின் உரிமையாளரான மௌலி சந்திரன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார்.

K KRISHNA PRIYA

Digitally signed by K KRISHNA PRIYA
Date: 2026.02.13 18:29:59 +0530

09.03.2021 ஆம் தேதி TN 34 AZ 7329 என்ற பதிவு எண் கொண்ட TATA ACE வாகனத்தையும், 22.03.2021 ஆம் தேதி TN 30 R 4307 பதிவு எண் கொண்ட டிவிஎஸ் ஸ்டார் சிட்டி இருசக்கர வாகனத்தையும் மோட்டார் வாகன ஆய்வாளரின் ஆய்விற்காக அனுப்பி வைத்துள்ளார்.

6) 19.05.2021 ஆம் தேதி மோட்டார் வாகன ஆய்வாளர் திரு சிவக்குமார் அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து மோட்டார் வாகன ஆய்வறிக்கைகள் பெற்றுள்ளார். அந்த மோட்டார் வாகன ஆய்வறிக்கைகள் முறையே **அ.சா.ஆ.6 மற்றும் அ.சா.ஆ.7** ஆகும்.

7) 19.05.2021 ஆம் தேதி சேலம் அரசு மோகன் குமாரமங்கலம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை மருத்துவர் திரு கார்த்திக் அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். பிரேத பரிசோதனை அறிக்கை பெற்றுள்ளார். அந்த பிரேத பரிசோதனை அறிக்கை **அ.சா.ஆ.8** ஆகும்.

8) இத்துடன் புலன் விசாரணை முடித்து எதிரி மீது இதச பிரிவு 279, 304(A) ன் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

<u>எதிரிதரப்பில் குறுக்கு விசாரணை</u>:-

1) புகார்தாரர் தன்னுடைய முதல் விசாரணையில் அவரிடம் இருந்து ஈரோடு அரசு மருத்துவமனையில் வைத்து விபத்து நடந்த அன்று இரவு

K KRISHNA PRIYA
Digitally signed by K KRISHNA PRIYA
Date: 2026.02.13 18:30:04 +0530

பெறப்பட்டதாக சாட்சியம் அளித்துள்ளார், ஆனால் புகார்தாரர் அவருடைய 161 வாக்குமூலத்தில் காவல் நிலையத்தில் புகார் வந்ததாக பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் ஆமாம். புகார்தாரருக்கு ஓட்டுநர் உரிமம் உள்ளதா என்பது குறித்து விசாரணை செய்யப்பட்டதா என்றால் செய்தோம், ஆனால் அவர் ஓட்டுநர் உரிமம் ஆதார்படுத்தவில்லை. புகார்தாரர் தன்னுடைய ஓட்டுநர் உரிமத்தை எடுத்து வந்து தருகிறேன் என்று சொன்னாரா அல்லது தனக்கு ஓட்டுநர் உரிமம் இல்லை என்று சொன்னாரா என்றால் ஓட்டுநர் உரிமம் எடுத்து வந்து தருவதாக சொன்னார் ஆனால் கொண்டு வந்து ஆஜர்படுத்தவில்லை. விபத்து சமயத்தில் புகார்தாரர் வசம் ஓட்டுநர் உரிமம் இல்லை என்னிடம் அதனால் தான் அவர் ஆஜர் படுத்தவில்லை என்று சொன்னால் சரியல்ல. புகார்தாரரின் வாகனத்திற்கு வலது முன்பக்கம் சேதங்கள் ஏற்பட்டு இருப்பதாக மோட்டார் வாகன ஆய்வாளரின் அறிக்கையில் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரி. எதிரி ஓட்டி வந்த வாகனம் சம்பவ இடத்திலிருந்து எவ்வளவு தூரத்தில் இருந்தது என்ற விவரத்தை பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் மற்றும் இறுதி அறிக்கையில் சொல்லப்படவில்லை என்றால் சரி. வழக்கை சரியாக புலன்விசாரணை செய்யவில்லை என்றால் சரியல்ல. சரியான முறையில் கவனமாக தான் எதிரி வாகனத்தை ஓட்டி வந்தார் என்றும், புகார்தாரர் தான் எதிரியின் வாகனத்தின் பின்னால் வந்து மோதினார் என்றும் எதிரியின் தவறினால் விபத்து ஏற்படவில்லை என்றும் விபத்து நடந்த உடனே அவர் வாகனத்தை ஓரம் கட்டி நிறுத்தினார் என்றும்

K KRISHNA PRIYA

Digitally signed by K KRISHNA PRIYA
Date: 2026.02.13 18:30:09 +0530

ஆம்புலன்ஸ்க்கு அவர்தான் தகவல் சொல்லி வரவழைத்தார் என்றும் சொன்னார் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தமில்லை என்றால் சரியல்ல. எதிரி மீது தவறான இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை இல்லை.</u>**

Taken down before me in open court read over to the witness in the presence of accused. Pleaded and admitted by him/her to be correct.

K KRISHNA PRIYA

Digitally signed by K KRISHNA PRIYA
Date: 2026.02.13 18:30:29 +0530

Chief Judicial Magistrate,
Erode.